**தலைப்பு 215 – தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 22 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 17 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கைகள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) 1.6.1.(ஆ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் நீங்கலாக, நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதி நிலைமைக் கூற்றின் மீதிகள் 2021 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக அக்கூற்றின் ஆரம்ப மீதியுடன் ஒப்பிடும் போது 2020 திசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட போதிலும் சிகாஸ் கணனி அச்சீட்டு பதிவுகளில் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் அக்கொள்வனவுகள் 2020 ஆம் ஆண்டிற்குரியதாக பதிவு செய்யப்பட்டிராமையும் இனங்காணப்பட்ட தவறான பதிவுகள் நிலவியமையும் காரணமாக 8 சொத்து வகைகளின் ரூபா 1,230,892,660 ஆன வேறுபாடொன்று நிலவியது. | இவ்வேறுபாட்டிற்கான காரணம் 2020 திசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சிகாஸ் கணனி அச்சீட்டு பதிவில் நிலையான சொத்துக்களின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்குரியதாக பதிவு செய்யப்பட்டிராமையும் இனங்காணப்பட்ட தவறுகள் பதிவு செய்யப்பட்டிருந்தமையும் ஆகும். | கொள்வனவுகள் அனைத்தும் உரிய வருடத்தில் கணக்கு வைக்கப்பட வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) முற்பணக் கணக்கு மீதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கடந்த வருடத்தில் காசாக தீர்க்கப்பட்ட முற்பண பெறுவனவுகளின் கூட்டுத்தொகையை உள்ளடக்கியிராமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான முற்பண பெறுவனவுகளான நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி மற்றும் கடந்த வருடத்தின் முற்பணக் கணக்கின் பிரகாரம் அப்பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 1,326,759 ஆன வேறுபாடொன்று நிலவியது. | நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பண பெறுவனவுகளுக்குரிய கடந்த வருடத்தின் தகவல்களை ஒப்பிடும் போது காசாக தீர்க்கப்பட்ட முற்பண பெறுவனவுகளின் கூட்டுத்தொகையான ரூபா 1,326,761 ஆன பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருக்காமை இவ்வேறுபாட்டிற்கு காரணமாக அமைந்திருந்தமை. | முற்பணக் கணக்கு மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்றின் பெறுமதிகளை ஒப்பிட்டு நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் ஆரம்ப மீதியை ஒப்பிடும் போது குறுக்கு பதிவுகளில் மீதிகள் முற்பணக் கணக்கின் மீதியினுள் உள்ளடக்கப்பட்டிராமையால் முற்பணக் கணக்கில் ரூபா 6,975,956 ஆன வேறுபாடு ஒன்றும் திறைசேரிக்கான தேறிய சொத்துக்களில் ரூபா 6,975,956 ஆன வேறுபாடும் நிலவியது. | 2020 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றினை தயாரிக்கும் போது 215012 இன் மீதி முற்பணக் கணக்கின் மீதியினுள் உள்ளடக்கப்பட்டிராமையும் 2021 ஆம் ஆண்டில் நிதிச் செயலாற்றல் கூற்றினையும் தயாரிக்கும் போது 215011 இன் மீதி மற்றும் 2115012 இன் மீதி ஆகிய இரு மீதிகளும் உள்ளடக்கப்பட்டமை இவ்வேறுபாட்டிற்கு காரணமாக அமைந்திருந்தமை. | சரியான பெறுமதிகளை உள்ளடக்கி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பிணைகள் பதிவேடு**<br>நிதிப்பிரமாணம் 891(1) பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கி பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் கள் தொடர்பில் பிணைப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாதிருந்தமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் யப்பானில் இடம்பெற்ற கைத்தொழில் பயிற்சி மதியுரையாளர்களுக்கான இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக புலமைப்பரிசில் பெறுனர்களை தெரிவு செய்தல் தொடர்பில் உரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆவணங்கள் தொடர்பில் சரியான தகவல்களை ஆராய்வதில் அசௌகரியம் ஒன்று நிலவுகின்றமை. | கணக்காய்விற்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வைப்புக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் பேணப்படும் 03 பொது வைப்புக் கணக்குகளில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக 2 வருடங்களை விஞ்சிய ரூபா 23,511,236 ஆன வைப்புக்கள் தொடர்பில் | மீதிகளை பரிசோதித்து தீர்ப்பனவு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிப்பிரமாணம் 570 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிப்பிரமாணம் 570 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அரச சேவைகள் நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய 2015-2018 காலப்பகுதிகளுக்குரிய ரூபா 54,680 ஆன தொகையினை உரிய நிதியத்திற்கு செலவு வைக்காது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | தொழில் திணைக்களத்திற்கு அனுப்பும் வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை. | தொழில் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வழங்கிய போதிலும் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தினுள் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 1,099,174 பெறுமதியான 03 காசோலைகள் 2015 ஆம் ஆண்டு முதல் பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | நிலவும் மீதிகளை எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | துரிதமாக தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 சனவரி முதல் இனங்காணப்படாத பெறுவனவுகள் 5 சந்தர்ப்பங்களுக்குரியதாக ரூபா 232,560 கூட்டுத்தொகை மற்றும் 2019 திசெம்பர் முதல் வங்கியில் இடப்பட்ட போதிலும் தீர்வையாகாத ரூபா 29,800 பெறுமதியான 02 காசோலைகள் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் வங்கியில் இடப்பட்ட போதிலும் தீர்வையாகாத காசோலைகள் 02 வருடங்களை விஞ்சியமையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை. | இனங்காணப்படாத பெறுவனவுகளை இனங்காண்பதற்கும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட காசோலைகள் தீர்வையாகா மைக்கு உரியதாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் செயற்படாத காரணத்தினால் 2016 ஆம் | தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழில் கல்லூரிகளுக்குரிய கொடுப்பனவுகளுக்கான பட்டியல்கள் தாமதமாக கிடைத்த காரணத்தினால் | பொறுப்புக்களை தாமதமின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 39 சந்தர்ப்பங்களுக்கு உரியதாக ரூபா 5,555,206 ஆன பொறுப்புக்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை | பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டுள்ளமை. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் 26 செலவின விடயங்களில் காணப்படும் மீதிகள் திறைசேரி கணனி அச்சீட்டுப் பிரிவின் (எஸ்ஏ 92) காண்பிக்கப்படும் மீதிகளுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 60 முதல் ரூபா 5,385,472 வரையான வீச்சில் வேறுபாடுகள் நிலவின. | 2021 ஒக்தோபர் 26 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2021-02 இன் 4.5 ஆம் பந்தியின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொறுப்புக்களை உள்ளடக்குவதற்கு வழங்கப்பட்டிருந்த இறுதித் திகதியின் பின்னர் கணக்குகள் பிரிவிற்கு பொறுப்புக்களாக காண்பித்து அனுப்பப்பட்டுள்ள பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டள்ள போதிலும் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பது. | ஆண்டிற்குரிய அனைத்து பொறுப்புக்களும் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 04 செலவின விடயங்களின் சேமிப்பினை விஞ்சி ரூபா 6,205,441 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | அத்தியாவசியமான பணிகளை நிறைவேற்றுவதற்காக பொறுப்புக்கள் ஏற்படுவதற்கு இது காரணமாக அமைந்திருந்தது. | நிதியேற்பாட்டினை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படக் கூடாது. |

**2.3 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசின் அமைச்சு / திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் மரணமடைந்த, ஓய்வுபெற்றுச் சென்ற, பணிவறிதாக்கப்பட்ட மற்றும் சேவையை கைவிட்டுச் சென்றுள்ள, சேவையை நிறைவு செய்துள்ள 81 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நினைவுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டு அறிவிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை. | கடனை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

வேண்டிய ரூபா 4,443,564 ஆன கடன் மீதி மீளாய்வாண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை வங்கியின் ஆனமடுவ கிளையின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 06 மாதங்களை கடந்த கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 249,862 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (viii) இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் கீழ் மீதியொன்று காணப்படவில்லை. | தவறுதலாக பொதுத் திறைசேரியினால் சுவீகரிக்கப்பட்ட மீதி உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அவ்வாறு இல்லாது இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 396(ஈ) பிரிவின் பிரகாரம் தலைமை அலுவலகம் மற்றும் தொழில்நுட்ப / கைத்தொழில் கல்லூரி 15 இற்கு வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 646,390 கூட்டுத்தொகையான 53 காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்த காசோலைகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | 6 மாதங்களை கடந்த காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டினுள் தலைமை அலுவலகத்திற்கு சொந்தமான வங்கிக் கணக்கிற்குரிய வங்கி இணக்கக் கூற்றில் 2018 யூலை மற்றும் 2021 ஏப்ரல் | இனங்காணப்படாத உருப்படிகளை இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பது. | இனங்காணப்படாத பெறுவனவுகளை இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்வையாகாத |

| | | |
|---|---|---|
| மாதங்களினுள் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 349,060 கூட்டுத்தொகையான 2 வைப்புக்கள் காணப்பட்டதுடன் 2021 சனவரி முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 8,980,552 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத பெறுவனவுகள் 302 சந்தர்ப்பங்கள் இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வைப்புக்களை இனங்கண்டு அந்த வருமானத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் யப்பானில் இடம்பெற்ற கைத்தொழில் பயிற்சி மதியுரையாளர்களின் இயலளவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு பங்குபற்றுவதற்கு இயலுமை இல்லாத உத்தியோகத்தர் ஒருவர் வெளிநாடு சென்ற குற்றத்திற்கு மற்றும் இந்த புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டத்திற்காக உத்தியோகத்தர் ஒருவரை தெரிவு செய்யும் போது தாபன விதிக்கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு மீறப்படும் வகையில் தவறாக உத்தியோகத்தர் ஒருவரை தெரிவு செய்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அரச நிதி முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு இடமளித்தமை மற்றும் கவனயீனமான முறையில் அரச சேவையை கௌரவத்தை பாதிக்கும் வகையில் செயற்பட்டமை தொடர்பில் முன்னாள் பிரதி பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி) மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாபன விதிக்கோவையின் | அமைச்சின் செயலாளரினால் குறித்த உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூலம் கண்டனம் விடுக்கப்பட்டுள்ளமை. | ஆரம்ப விசாரணை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட வாறு தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

XLVIII ஆம் அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் குற்றப்பத்திரம் வழங்கப்பட்டு முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்துவதற்கு 2018 நவம்பர் 24 ஆந் திகதி ஆரம்ப விசாரணை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எனினும் 2022 மே 22 ஆந் திகதி வரையிலும் அப்பரிந்துரையினை நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் கீழ் உள்ள 39 தொழில்நுட்ப / கைத்தொழில் கல்லூரிகளில் 15 அமைந்துள்ள காணிகளின் உரித்து குறித்த கல்லூரிகளுக்கு அல்லது திணைக்களத்திற்கு சுவீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இதுவரையிலும் சுவீகரிப்பு இடம்பெற்றிருக்கவில்லை என்பதும் பிரதேச செயலாளர்கள் இது தொடர்பில் நியாயமான பணிப்பொறுப்பினை நிறைவேற்றாமையால் கொள்கைத் தீர்மானத்தை எடுப்பதில் சிக்கலொன்று நிலவுகின்றமை. | காணிகளின் உரித்தினை பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2019 பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்த கைதவிர்ப்பு செய்ய வேண்டிய 2922 சொத்து வகைகள் மற்றும் விற்பனைக்காக பரிந்துரைக்கப்பட்டிருந்த 5432 சொத்து வகைகளை இனங்கண்டு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பண்டங்கள் பலவருடங்களுக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்டவை என்பதுடன் அவற்றின் கிரயத்தினை இனங்காணுதவ் சிரமமாக உள்ளது. அதனால் அந்த சொத்துக்களை மதிப்பீட்டுச் சபையின் மூலம் மதிப்பிட்டு எதிர்காலத்தில் புத்தகங்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பொருள் மெய்மையாய்வுச் சபையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். |

**3.2 நட்டங்கள் மற்றும் இழப்புகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2008 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 4,510,469 பெறுமதியான அழிவுநட்டங்கள் தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை 103(1) பிரகாரம் நடவடிக்கை எடுக்காது 10 முதல் 2 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டங்கள் மற்றும் இழப்புக்களை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமையும் குறித்த பணிகளை துரிதமாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 2005-2019 காலப்பகுதியில் 05 வாகன விபத்துக்களில் ஏற்பட்ட நட்டங்களில் காப்புறுதி இழப்பீடு பெற்றுக் கொள்ளப்படாத கூட்டுப்பெறுமதியான ரூபா 208,416 ஆன தொகை இலங்கை சனநாயக சோசலிசக் குடிரயரசின் நிதிப்பிரமாணக் கோவை 104(4) கீழ் நட்டங்கள் தொடர்பான இறுதி அறிக்கையின் பிரகாரம் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டியதாக பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அத்தொகையை குறித்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்விபத்துக்கள் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவு நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பணம் வழங்குவதற்கான அளவீடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அளவீடுகளின் அடிப்படையில் SSDP செயற்திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றவதற்காக 2020 ஆம் ஆண்டில் ஒன்பது உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,095,994 ஆன படியொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் முன்னுரிமை பணிகள் சிலவான பயிற்றுவிப்பாளர்களின் தொழில்சார் இயலுமைகளை அபிவிருத்தி செய்தல், தரமான கைத்தொழில் மற்றும் தொழில்சார் கற்கைகள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துதல், புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தல் அல்லது திருத்தியமைத்தல், தொழில்சார் ஆசிரியர்களின் தேவைப்பாடு ஆகியவற்றை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல், தொழில்நுட்பக் கல்லூரிகளுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் போன்ற செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் 0 | 65% ஆன பௌதீக செயல்முன்னேற்றத்தை அடைந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் அரசின் நிதிக்கொள்கைகளின் அடிப்படையில் ஆரம்ப பணிகள் திட்டமிடப்பட்ட போதிலும் செயற்படுத்துவதில் சிரமம் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் நிலவியமை. | இச்செயற்திட்டத்தின் முன்னுரிமைப் பணிகளை நிறைவேற்றிய பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் முதல் 41 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் நிலவியது. | | |
| (ஆ) | 2017-2019 ஆம் ஆண்டுகளில் கசலக்க மற்றும் ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த 10 பாடநெறிகளுக்காக நிரந்தர கல்விசார் பதவியணியொன்று இல்லாதிருந்தமை மற்றும் வெளிவாரி விரிவுரையாளர்கள் குறித்த தகைமைகளை பூர்த்தி செய்திராமை போன்ற காரணங்களினால் பாடநெறிகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. | கல்விசார் பதவியணியில் நிலவும் வெற்றிடங்கள் காரணமாக வெளிவாரி விரிவுரையாளர்களாக தகைமைகளை பூர்த்தி செய்துள்ள வளப்பங்களிப்பாளர்கள் வாரஇறுதியில் ஈடுபடுத்தி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை வார நாட்களில் வெளிவாரி வளப்பங்களிப்பாளர்களாக ஈடுபடுத்துவதன் மூலம் இந்த பிரச்சினையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தகைமை பெற்ற பேராசிரியர்களை இணைத்துக் கொண்டு திட்டமிடப்பட்ட பாடநெறிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 6 கல்லூரிகளில் பாடநெறிகளின் தரத்தை அதிகரிப்பதற்கு உரிய மற்றும் நடைமுறை பரிசோதனைகளுக்கு தேவையான நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் 19 வகை போதியளவில் காணப்படவில்லை. | நாட்டில் நிலவும் பொருளாதார இடரின் மத்தியில் பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையில் முன்னுரிமைகள் இனங்காணப்பட்டு உரிய தேவைப்பாடுகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அத்தியாவசியமான உபகரணங்களை வழங்கி பாடநெறிகளின் தரத்தை பேணுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பாடநெறிகளை நடாத்துவதற்கு போதுமான வகுப்பறை வசதிகள், கைத்தொழில், தொழில்நுட்ப கல்லூரிகள் 07 இல் காணப்படவில்லை. | நாட்டில் நிலவிய பொருளாதார இடரின் மத்தியில் பொதுதிறைசேரியினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையில் முன்னுரிமைகள் இனங்காணப்பட்டு உரிய தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலவும் வளங்களை பயன்படுத்தி வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | இலங்கை தொழில்நுட்ப கைத்தொழில் உத்தியோகத்தர்களின் திணைக்கள பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களினதும் ஒருங்கிணைந்த சேவையின் உத்தியோகத்தர்களினதும் வருடாந்த இடமாற்றல் நடைமுறை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் 09 கல்லூரிகளின் 186 உத்தியோகத்தர்கள் ஒரே சேவை நிலையத்தில் தங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது. | இடமாற்றல்களை மேற்கொள்ளும் போது ஒவ்வொரு தொழில்நுட்ப / கைத்தொழில் கல்லூரிகளின் நடைமுறைப்படுத்தப்படும் பாடநெறிகளுக்கு இணங்கும் வகையில் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் சேவைக்காலம் மாத்திரம் கருத்தில் கொள்ளப்பட்டு இடமாற்றம் வழங்கப்படும் வரையில் பாடநெறிகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு சிக்கல்கள் ஏற்படும் என்பது. | இடமாற்றல் நடைமுறைக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குளியாப்பிட்டிய, குருணாகலை, வாரியபொல தொழில்நுட்ப கல்லூரிகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு எந்தவித உத்தியோகத்தரும் இணைப்புச் செய்யப்படாத சிரேஷ்ட மட்டத்திலான 2 பதவிகளும் இரண்டாம் மட்டத்திலான 13 பதவிகளும் மூன்றாம் மட்டத்திலான 5 பதவிகளும் ஆரம்ப மட்டத்திலான 3 பதவிகளுமாக 74 வெற்றிடங்கள் நிலவின. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளமை. | எந்தவொரு உத்தியோகத்தரும் இணைப்புச் செய்யப்படாத பதவிகளுக்கு அத்தியாவசியமான பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்புக்கள் துரிதமாக மேற்கொள்ள வேண்டியமை. |
| (ஆ) | கைத்தொழில் / தொழில்நுட்பக் கல்லூரிகளில் 16 இற்காக இரு விரிவுரையாளர்கள் மற்றும் ஒரு பதிவாளர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு எந்தவித விரிவுரையாளரோ பதிவாளரோ இணைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒட்டுமொத்தமாக அரச சேவையில் AO பற்றாக்குறையொன்று நிலவுகின்றது. அது வரையிலும் தற்போதுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அக்கடமைகள் நிறைவேற்றப்படுகின்றது. | அத்தியாவசியமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்களை துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அனைத்து கல்லூரிகளுக்காகவும் ஒரு சிற்பி வீதம் 39 பேர் அங்கீகரிக்கப்பட்டுள்ள போது காலி மற்றும் வறக்காப்பொல கல்லூரிகளில் மாத்திரம் உள்ளபடியாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | கிடைத்த விண்ணப்பங்களிலேயே தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்காக பரீட்சையொன்றினை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | ஆட்சேர்ப்புக்களை துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 9 தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 30 தொழில்சார் கல்லூரிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட மதியுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களின் எண்ணிக்கை முறையே 897 மற்றும் 265 ஆன போதிலும் தற்போது உள்ளபடியான பதவியணி 442 மற்றும் 222 ஆகும். வெற்றிடமான பதவியணி 455 ஆக காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுடன் ஒப்பிடும் போது முறையே 65 சதவீதம் மற்றும் 85 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவினால் உள்ளபடியான பதவியணியின் வெற்றிடமான கல்லூரிகள் முறையே 16 மற்றும் 4 காணப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லையென்பது. | அத்தியவசியமான பதவிகளுக்கு உரிய ஆட்சேர்ப்புக்கள் துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |